# பொது அறிவுப்போட்டிக்கான விதிமுறைகள் 2018

**விதி 1** பிரான்சு தமிழர் கல்வி நிலையம் நடாத்தும் பொது அறிவுப்போட்டி நிகழ்வு பற்றிய விபரங்களையும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளையும் பற்றி கீழே தரப்பட்டுள்ளது.

**விதி 2** இது குழுக்களுக்கிடையேயான போட்டியாகும். இதில் பங்குபற்றும் மாணவர்கள் வயதெல்லையை அடிப்படையாக கொண்டு தரம்பிரிக்கப்பட்டு எண்ணிக்கை அளவில் ஒவ்வொரு குழுவாக உருவாக்கப்படுகின்றனர். அதன் விபரம் கீழே தரப்படுகிறது. எமது பாடசாலை இணையவலைத்தளத்தில் ஒவ்வொரு பிரிவிற்கான கேள்விக்கொத்தை பெற்றுக் கொள்ளலாம் .இதில் பங்குபற்றும் ஒவ்வொரு மாணவரும் பாடசாலையின் மாணவ அங்கத்தவனாக தன்னை பதிவு செய்திருத்தல் வேண்டும். போட்டியின் விதிமுறைகளை தெரிந்து அதனை கடைப்பிடித்தல் வேண்டும்.

**விதி 3 குழு எண்ணிக்கை பற்றிய விபரம்**

ஒவ்வொரு குழுவிலும் 12 தொடக்கம் 16 வரையான மாணவர்கள் பங்கேற்பர்.

**விதி 4 வயதுப்பிரிவுகள் பற்றிய விபரம்**

சனவரி 1ம் நாளை அடிப்படையாக கொண்டு வயதுப்பிரிவுகள் உருவாக்கப்படுகின்றன.

**9 வயதிற்கு குறைந்த பிரிவினர்**
01.01.2009 31.12.2012க்கும் இடையில் பிறந்தவர்கள்
**12 வயதிற்கு குறைந்த பிரிவினர்**
01.01.2006 க்கும் 31.12.2008 இடையில் பிறந்தவர்கள்
**15 வயதிற்கு குறைந்த பிரிவினர்**
01.01.2003க்கும் 31.12.2005இடையில் பிறந்தவர்கள்
**15 வயதிற்கு மேற்பட்ட பிரிவினர்**
01.01.2003க்கு முன் பிறந்தவர்கள்

**விதி 5 குழுக்களின் தெரிவு ஒழுங்குகள்**

<u>தெரிவுப் போட்டி ஒழுங்குகள்</u>

தெரிவு முதற்சுற்று ஒவ்வொரு குழுவிலுள்ள பங்கு பற்றும் ஒவ்வொரு மாணவரும் இதன் போது பங்கு பற்றுவர்

<u>இறுதிச் சுற்று தனிநபர் கேள்வி</u>

இதன் போது உதாரணமாக போட்டியிடும் குழு யிலும் குழு யிலும் மாணவர்களின் எண்ணிக்கை அளவு வித்தியாசப்படும் போது குழுத்தலைவர்களின் பரிந்துரைக்கும் மாணவர் அந்த எண்ணிக்கை அளவை , ஈடுகட்டும் வகையில் மீண்டும் பங்கேற்று பதிலளிக்க அனுமதிக்கப்படுவர்

இறுதி சுற்று குழுக்கழுக்கிடையேயான போட்டியின் போது கேட்கப்படும் கேள்விகளுக்கு ஒவ்வொரு குழுவிலிருக்கும் மாணவர் எண்ணிக்கை வித்தியாசப்படும் போது கேட்கப்படும் கேள்விகளுக்கு குறித்த குழுவிலிருக்கும் எந்த ஒரு மாணவரும் பங்கேற்று பதிலளிக்கலாம்.

**விதி 6 புள்ளிகள் வழங்கப்படும் விபரங்கள்**

தெரிவுச் சுற்றுகளின் போது வழங்கப்படும் மொத்த புள்ளிகளின் சராசரி கொண்டு 100 க்கு கணிக்கப்பட்டு இறுதிப்புள்ளி வழங்கப்படும்.

$$Score\ Finale = \frac{Total\ des\ points\ de\ l'équipe}{Nombre\ d'élèves\ dans\ l'équipe} * 100$$

இறுதிச்சுற்று குழுவுக்கான கேள்வி

<u>ஒவ்வொரு சரியான விடைக்கான புள்ளி விபரம் கீழே</u>

குழுக்களுக்கிடையே சம அளவான புள்ளிகள் இருக்கும் பட்சத்தில் தயார்ப்படுத்தப்படாத புதிய கேள்விகள் குழுவிலிருக்கும் ஒவ்வொருவரிடமும் முறையே கேட்கப்படும் முதலாவது தவறான விடை அக்குழுவை போட்டியிலிருந்து ஆட்டம் இழக்கச் செய்யும்

எந்தக்குழு முதலில் பங்கு பற்றுவது என்பதை குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும்

ஒற்றை இலக்கத்தில் தெரிவான குழுக்களின் எண்ணிக்கை அமையும் பட்சத்தில் மனக்கணக்குப் போட்டி வைத்து முதலாவது தெரிவாகும் குழு தேர்ந்தெடுக்கப்படும்

Buzzer அழுத்திய மாணவர் தவறாக விடையளிக்கும் பட்சத்தில் வாய்ப்பு அடுத்த குழுவுக்கு தரப்படும்

Buzzerஅழுத்தாமல் முழுமையாக கேள்வி கேட்டு முடிக்க முன்பு தரப்படும் விடை கணக்கில் எடுக்கப்படமாட்டாது .

போட்டியாளரை தவிர்ந்த ஏனையோர் பதிலை சொல்லிக் கொடுக்கும் பட்சத்தில் போட்டியின் விதிமுறைகளை மீறுவதாக கருதப்பட்டு அக் குழுவுக்கானபுள்ளிகள் குறைக்கப்படும்

**விதி 7 தெரிவிற்கான செயற்பாடுகள்**

தெரிவு 3 கட்டமாக நடாத்தப்படும்

<u>*பகுதி 1 கேள்வி - பதில்*</u>

ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒவ்வொரு மாணவரும் தயார்ப்படுத்தப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும் இதற்கான கால அளவு 10 நொடிகள் ஆகும்

<u>*பகுதி 2 மேலதிக தேர்வு 1*</u>

slides உபயோகித்து பின்வரும் வகையில் கேள்விகள் அமையும்

- விடுபட்ட சொல்லை கண்டு பிடித்தல்
- ஒரு Logo கண்டு பிடித்தல்
- .உதவிக்குறிப்புகளின் மூலம் ஒரு உருவையோ படத்தையோ புதிரிலிருந்து விடுவித்தல்
- தரப்படும் சொல்லுக்கு எதிர் அல்லது ஒத்த சொல்லை கூறல்
- ஒரு வரலாற்று சுற்றுலாச் சின்னத்திலிருந்து அதன் அமைவிடத்தையோ நாட்டையோ கூறல்

<u>*பகுதி 3 மேலதிக தேர்வு 2*</u>

குழுவின் தலைவர் மற்றும் 2 மாணவர்கள் தமது குழுவுக் கெனத் தரப்பட்ட விடயத்தைப் புதிய தொழில் நுட்ப உத்திகளை பயன்படுத்தி 10 (4+3+3) நிமிடங்களில் எமக்கு அறிமுகப்படுத்த வேண்டும் Powerpoint Slide பாவனையில் காட்டலாம்.

**விடயங்கள் :**

- **மகாபாரதம்** : கல்முனை, வல்வெட்டித்துறை, கிளிநொச்சி & யாழ்ப்பாணம்
- **குமரிக்கண்டம்** : காங்கேசன்துறை, மன்னார், திருகோணமலை & வவுனியா
- **உயிரணுக்கள்** : புத்தளம், முல்லைத்தீவு நெடுங்கேணி & மட்டக்களப்பு

**விதி 8 : தெரிவுப்போட்டி புள்ளியிடல்**

*பகுதி 1 கேள்வி - பதில்*

ஒவ்வொரு சரியான கேள்விக்கும் அக் குழுவுக்கு 5 புள்ளிகள் வழங்கப்படும்

*பகுதி 2 மேலதிக தேர்வு 1*

ஒவ்வொரு சரியான பதிலும் பத்துப்புள்ளிகளைத் தரும் இதற்கு தரப்படும் படத்திற்கு படப்புதிரை விடுவிக்க வாய்ப்பளிக்கும் உதவிக்குறிப்பு ஒவ்வொன்றிற்கும் இரண்டு புள்ளிகள் குறைக்கப்படும்

*பகுதி 3 மேலதிக தேர்வு 2*

அறிமுகம் செய்தலுக்கான புள்ளிகள் பின்வரும் அடிப்படையில் வழங்கப்படும்

- நேரக்கட்டுப்பாடு
- உள்ளடக்கம்
- அறிமுகப்படுத்தும் விதம்
- தொனி
- பிரெஞ்சில் 4நிமிடம், தமிழில் 3நிமிடம் மற்றும் ஆங்கிலத்தில் 3நிமிடம்

இதற்கு மொத்தமாக இருபது புள்ளிகள் நடுவர்களால் வழங்கப்படும்

பகுதி 1,2,3 இனதும் கூட்டுத்தொகை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கப்படும்

**விதி 9 இறுதிச் சுற்றுகளுக்கான கேள்வி பதில்**

இதன் போது தரப்பட்ட மற்றும் தரப்படாத கேள்விகள் இடம் பெறும் இப் போட்டிகள் நேரடி வெற்றி தோல்வியை தீர்மானிக்கும்

**விதி 10 கால் இறுதி ஆட்டத்திற்கான தெரிவு**

தெரிவுப் போட்டியில் அதிக புள்ளிகளை பெற்ற முதல் எட்டு குழுக்கள் கால் இறுதியில் பங்குபற்றும்

**விதி 11 கால் இறுதி அரை இறுதி இறுதி போட்டிகளுக்கான நடைமுறைகள்**

இரண்டு குழுக்களை சேர்ந்த ஒரே வயதுப்பிரிவினர் மோதிக்கொள்வர் இதன் போது இரண்டு கேள்விகள் கேட்கப்படும் முதலில் Buzzer அழுத்துபவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் விடை பிழையாயின் எதிரணிக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் அதற்கு 15 நொடிகள் வழங்கப்படும்

**விதி 12 கால் இறுதி அரை இறுதியில் புள்ளிகள் கணக்கிடப்படும் முறை**

ஒவ்வொரு சந்திப்பிலும் சரியான விடைக்கு 5 புள்ளிகள் வழங்கப்படும் பிழையான விடையாயின் எதிரணிக்கு புள்ளிகள் செல்லும்

**விதி 13 இறுதிச்சுற்றின் மேலதிக தேர்வு**

இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட இரண்டு குழுக்களும் 3 பகுதிகளாக மோதுவர்

*பகுதி 1 கேள்வி பதில் (விதி 11ல் குறிப்பிடப்பட்டுள்ளது போல்)*

*பகுதி 2 ஆராய்தல் புரிந்து கொள்ளல்*

அரசியல் பற்றிய ஒரு தொகுப்பு போட்டிக்கு 3 தினங்களுக்கு முன் வழங்கப்படும் அதை அனைத்து மாணவர்களும் ஆழமாக internet உதவியுடன் ஆய்ந்து தயார் செய்தல் வேண்டும். இதில் பத்து கேள்விகள் Buzzer உதவியுடன் கேட்கப்படும்

*பகுதி 3 reportage*

Ecologie பற்றிய reportage காட்டப்பட்டு அது பற்றி பத்து கேள்விகள் கேட்கப்படும்

**விதி 14 இறுதிச்சுற்று புள்ளியிடல்**

மூன்று பகுதியினதும் மொத்தப்புள்ளிகள் இறுதிச்சுற்றை தீர்மானிக்கும்

*பகுதி 1 கேள்வி பதில்*

ஒவ்வொரு சரியான விடைக்கும் 5 புள்ளிகள் வழங்கப்படும் பிழையான விடை தரப்படின் சந்தர்ப்பம் எதிரணிக்கு வழங்கப்பட்டு சரியாயின் 3 புள்ளிகள் வழங்கப்படும்

*பகுதி 2 ஆராய்தல் புரிந்து கொள்ளல்*

ஒவ்வொரு சரியான விடைக்கும் பத்துப் புள்ளிகள் வழங்கப்படும்

*பகுதி 3 Reportage*

ஒவ்வொரு சரியான விடைக்கும் பத்துப் புள்ளிகள் வழங்கப்படும்

**வெற்றியாளர்**

அதிக புள்ளிகளைப் பெற்ற குழு அல்லது சமபுள்ளியாயின் கேட்கப்படும் தொடர்ச்சியான கேள்விகளுக்கு பிழையின்றி பதிலளிக்கும் குழு பொது அறிவுப்போட்டி 2017ன் வெற்றியாளராக அறிவிக்கப்படும்.